Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 018 | சனிக்கிழமை Saturday | 18.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# "தொகுதி மறுவரையறை சட்டத் திருத்தத்தை மொத்தமாக திரும்பப் பெற வேண்டும்"

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை: தொகுதி மறுவரையறைசட்டத்திருத்தத்தை ஒன்றிய பாஜக அரசு மொத்தமாகத் திரும்பப் பெற வேண்டும் என்று முதல்வர்மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "தமிழ்நாட்டின் அரசியலுக்கு மிக முக்கியமான நாள் இன்று. தொகுதி மறுவரையறைக்கு எதிரான நம் போராட்டங்களின் முடிவினை அறியப் போகும் நாள்.

நம்முடைய கடும் எதிர்ப்பினையும் போராட்டத்தினையும் தொடர்ந்து, தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டின் தொகுதி அளவு குறையாது என பிரதமரும் உள்துறை அமைச்சரும் நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளனர்.

ஆனால், சொல் ஒன்று –செயல்வேறு என்பதாக, இவர்கள் தாக்கல் செய்துள்ள சட்டமுன்வடிவு முழுக்க முழுக்க ஏமாற்றுத் திட்டமாக இருக்கிறது. இதை நம்பவும் முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது எனத் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம்.

இந்தச் சட்டமுன்வடிவில் தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம், இவர்கள் நினைத்தால் நினைத்த நேரத்தில், நினைத்த முறையில், எப்போது வேண்டுமானாலும் எதிர்காலத்தில், இவர்களுக்கு சாதகமான வகையில், இந்திய மாநிலங்களின் தொகுதியளவை மாற்றியமைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் இந்தக் கருப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. பெரும் சூழ்ச்சியை உள்ளடக்கியதாக இந்தச் சட்டமுன்வடிவு இருக்கிறது.

அவசரகதியில் இதனை நிறைவேற்றக் கூடாது. ஒன்றிய அரசு இதனை முழுவதுமாகத் திரும்பப் பெற வேண்டும். எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற திமிரில்,எங்களின் எதிர்ப்பை மீறிஇதனைநிறைவேற்றினால்,அதற்கான விளைவுகளைத் தமிழ்நாட்டில் நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். நேரு இந்தியைத் திணிக்க மாட்டோம் என்றார், இருந்தவரை அந்த உறுதிமொழியைக் காப்பாற்றினார்.

ஆனால், தற்போதைய ஒன்றிய ஆட்சியாளர்களோ மாநில உரிமைகளைக் காப்பாற்றுவோம் எனச் சொல்லிக்கொண்டே அதனைச் சில்லு சில்லாக நொறுக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். நாம் கோருவது, முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தியும், வாஜ்பாயும் அரசியலமைப்புச் சட்டத்திலேயே திருத்தம் செய்து,25 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுசீரமைப்பை நிறுத்தி வைத்ததைப் போன்ற சட்டப் பாதுகாப்பு.

தொகுதி மறுவரையறை மசோதாவை திரும்பப் பெறுங்கள். தமிழ்நாட்டின் குரலுக்கு ஒன்றிய பாஜக அரசு செவிசாய்த்தே ஆக வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதா: அனைத்து எம்.பி.க்களிடமும் கடைசி நேர ஆதரவு கோரிய பிரதமர் மோடி



புதுடெல்லி:

மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவுக்கு ஆதரவு அளிக்குமாறு அனைத்து எம்.பிக்களுக்கும்கடைசி நேர வேண்டுகோளை முன்வைத்துள்ளார் பிரதமர் மோடி.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை திருத்துவது குறித்த விவாதம் தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றிரவு 1 மணி வரையில் இந்த விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. தவறான புரிதல்களை நீக்கும் வகையில் தர்க்க ரீதியிலான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்ட கூடுதல் தகவல்களும்

அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எவருடைய மனதிலாவது எதிர்ப்பை ஏற்படுத்தக்கூடிய சிக்கல்கள் இருப்பின் அவையும் தீர்க்கப்பட்டுள்ளன.

நாட்டில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு விவகாரத்தைச் சுற்றி கடந்த 40 ஆண்டுகளாக பெருமளவிலான அரசியல் விளையாட்டுக்கள் அரங்கேறி வந்துள்ளன. நாட்டின் மக்கள் தொகையில் சரி பாதியாக உள்ள பெண்களுக்கு அவர்களுக்கான உரிமைகள் நிச்சயம் கிடைக்க வேண்டிய தருணம் இதுவே ஆகும்.

சுதந்திரம் பெற்று பல பத்தாண்டுகள் கடந்துவிட்ட பின்னரும்கூட முடிவெடுக்கும் செயல்முறைகளில் இந்தியப் பெண்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே பிரதிநிதித்துவம் இருப்பது ஏற்புடையது அல்ல. இன்னும் சற்று நேரத்தில் மக்களவையில் வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளையும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நான் ஒரு வேண்டுகோளை முன்வை க்கிறேன்.தயவு செய்து உரிய முறையில் ஆலோசித்து முழுமையான உணர்வுப்பூர்வமான அக்கறையுடன் ஒரு முடிவை எடுத்து பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக வாக்களியுங்கள்.

நாட்டின் பெண்கள் சக்தியின் சார்பாக அனைத்து உறுப்பினர்களிடமும் நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.தயவுசெய்துபெண் சக்தியின் உணர்வுகளைப் புண்படுத்த க்கூடிய எதையும் செய்துவிடாதீர்கள். நாட்டின் கோடிக்கணக்கான பெண்களின் கண்கள் நம் அனைவர் மீதும், நமது நோக்கங்கள் மீதும், நமது முடிவுகள் மீதும் பதிந்துள்ளன. தயவு செய்தி மகளிர் இட ஒதுக்கீடு சட்டத் திருத்தத்துக்கு உங்கள் ஆதரவை அளியுங்கள்" என தெரிவித்துள்ளார்.

# கரூரில் செந்தில் பாலாஜி ஆதரவாளர்கள் அலுவலகம், வீடுகளில் வருமான வரித் துறை சோதனை

கரூர்: வருமான வரித் துறை அதிகாரிகள் கரூரில் முன்னாள் அமைச்சர்செந்தில்பாலாஜியின் ஆதரவாளர்களுக்கு சொந்தமான 7 இடங்களில்இன்றுகாலைமுதல் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கரூர், செங்குந்தபுரம் நான்காவது சாலையில் செந்தில் பாலாஜியின் ஆதரவாளரான எம்.சி. சங்கர் ஆனந்திற்கு சொந்தமான சங்கர் ஆனந்த் இன்பிரா பிரவேட் லிமிடெட் நிறுவனம் அமைந்துள்ளது.




இந்நிலையில்அரசு பணி ஒப்பந்ததாரரான சங்கர் ஆனந்த் அலுவலகத்திற்கு, 5 வருமான வரித்துறை அதிகாரிகள் காலை 11 மணியளவில் வந்து திடீர் சோதனையை தொடங்கினர்.

மேலும் இதே பகுதியில் செங்குந்தபுரம், மூன்றாவது தெருவில் மற்றொரு சங்கர் இன்பிரா அலுவலகம் அமைந்துள்ளது. இங்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் வந்த வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையிட்டு வருகின்றனர். இதே போல், சங்கர் ஆனந்தின் வீடு அமைந்துள்ள பழனியப்பா நகர் அடுக்குமாடி குடியிருப்பில், மேலும் ஐந்து வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையை துவங்கியுள்ளனர்.

இது தவிர, செந்தில் பாலாஜியின் மற்றொரு ஆதரவாளரான கார்த்திக்கிற்கு சொந்தமான சக்தி மெஸ், கரூர் – கோயம்புத்தூர் சாலையில், திருக்காம்புலியூர் பகுதியில் அமைந்துள்ளது. அந்த சக்தி மெஸ் மற்றும் கார்த்திக்கின் கோதை நகர் வீட்டில், வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையை துவங்கியுள்ளனர். கோயம்புத்தூர் சாலையில் அமைந்துள்ள கொங்கு மெஸ், ராயலூரில் உள்ள கொங்கு மெஸ் உரிமையாளர் சுப்பிரமணியின் வீடு ஆகிய 7 இடங்களில் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை செய்யும் இடங்களில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவப் படை வீரர்கள் பாதுகாப்புபணியில் ஈடுபட்டுள்ளனர்.

50–க்கும் மேற்பட்ட வருமான வரித் துறை அதிகாரிகள், 15 பேர் கொண்ட குழுக்களாக கரூரில் முகாமிட்டு ள்ளதால் சோதனை நடைபெறும் இடங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரே கட்டமாக வரும் 23–ம் தேதி சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்நிலையில், திமுகவின் கொங்கு மண்டல முக்கிய பிரமுகரான செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்களின் வீடு மற்றும் அலுவலகங்களில் வருமான வரித் துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தி வருவது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழகத்தில் ஏப்ரல் 23ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு




சென்னை: தமிழகத்தில் ஏப்.23–ம்தேதிவரை ஒரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: "மரத்வாடா முதல் மன்னார் வளைகுடா வரை உள் கர்நாடகா, ராயல சீமா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில்,ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது.

21–ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும்,காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம் மற்றும் புதுச்சேரிபகுதிகளில்வறண்ட வானிலையே நிலவக்கூடும்.

ஏப்.22, 23 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தெற்கு கடலோர தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

ஏப்.18 (நாளை) முதல் ஏப்.21–ம்தேதி வரை உள் தமிழக மாவட்டங்களில், அதிகபட்ச வெப்ப நிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பர்கூர் சிப்காட் நிறுவனங்களின் சி.எஸ்.ஆர். நிதி அரசுப் பள்ளிகளுக்கு ரூ.92 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடங்கள் அர்ப்பணிப்பு



கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சிப்காட் வளாகத்தில் அமைந்துள்ள செய்யார் செஸ் டெவலப்பர்ஸ்பிரைவேட் லிமிடெட் மற்றும் :.பேர்வே எண்டர்பிரைசஸ் லிமிடெட் (யூனிட் 1, 2)ஆகியநிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின் (CSR) கீழ், கல்வி மற்றும் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூ. 92,06,664 (தொண்ணூற்று இரண்டு லட்சத்து ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்து நான்கு ரூபாய்) மதிப்பிலான பணிகள் நிறைவுற்று, 15.04.2026 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டது. மத்தூர் மற்றும் ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் குன்னத்தூர், கொடமாண்டப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் பயன்பாட்டிற்காகநவீனகழிப்பிடக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஊத்தங்கரை மினி விளையாட்டு மைதானத்தில் ஒடுதளம் அமைத்தல் மற்றும் மழைநீர்வடிகால்மறுசீரமைப்புப்பணிகள்சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் :.பேர்வே எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. ஜெயராஜ் பாபு அவர்கள் கலந்துகொண்டு, கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் சீரமைக்கப்பட்ட மைதானத்தை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் முறைப்படி ஒப்படைத்தார். இந்நிகழ்வில் வெல்பேர் வெல்கம அசோசியேசன் உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பள்ளித் தரப்பினர் முன்னிலை வகித்தனர்.நிறுவனங்களின் இந்த முன்னெடுப்பு, கிராமப்புற மாணவிகளின் சுகாதாரத்தை உறுதி செய்வதோடு, விளையாட்டுவீரர்களின் திறனை மேம்படுத்தவும் பெரிதும் உதவும் என அப்பகுதி மக்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.



# தமிழக வெற்றி கழகத்தில் இணைந்த காங்கிரஸ் வட்டார தலைவர் கட்சி துண்டு அணிவித்து வரவேற்ற வேட்பாளர் டாக்டர் பிரபு

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தமிழக வெற்றி கழகத்தில் காரைக்குடி அருகே உள்ள சாக்கோட்டை காங்கிரஸ் கட்சியின் மேற்கு வட்டார தலைவராக இருந்து வருபவர் பாலா இவர் காங்கிரஸ் கட்சியில் வட்டார தலைவர்கள் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளுக்கு சரியான மரியாதை கிடைப்பதில்லை என்றும் தளபதிவிஜய்கூறியதுபோல் உண்மையான காங்கிரஸ் கட்சியினர் தமிழக வெற்றி கழகம் பக்கம் தான் இருப்பதாக கூறி காரைக்குடி தமிழக வெற்றி கழக அலுவலகத்தில் காரைக்குடி வேட்பாளர் டாக்டர் பிரபு முன்னிலையில் தன்னை தமிழக வெற்றி கழகத்தில் கட்சியில் இணைத்துக் கொண்டார் அவருக்கு கட்சி துண்டு அணிவித்து டாக்டர் பிரபு வரவேற்றார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.04.2026) ஈரோடுமாவட்டம்,மொடக்குறிச்சிவருவாய்வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள சீலிடப்பட்ட தபால் வாக்குகள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையின் (Strong Room) பாதுகாப்பு பணியினை ஆய்வு மேற்கொண்டார்.

## சி.பி.எஸ்.இ. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில்

# ஸ்ரீ சைதன்யா பள்ளி அகில இந்தியாவில் முதல் மதிப்பெண் பெற்று மாபெரும் சாதனை



பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளில் ஸ்ரீ சைதன்யா பள்ளி அகில இந்தியாவில்முதல் மதிப்பெண் பெற்று மாபெரும் சாதனை,கோவை மண்டலத்தில் 498 மதிப்பெண்கள் மற்றும் 490 க்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ஸ்ரீ சைதன்யாபள்ளியில் பாராட்டு விழா

மத்திய கல்வி வாரியம் சி.பி.எஸ்.இ. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டது..

இந்த நிலையில், கோவை மண்டலத்தில் செயல்பட்டுவரும்ஸ்ரீசைதன்யா பள்ளி மாணவர்கள் சிறப்பான தேர்ச்சி விகிதத்தையும், உயர்ந்த மதிப்பெண்களையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அகில இந்திய அளவில் ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்கள் 499 மதிப்பெண்கள் பெற்று கவனம் ஈர்த்துள்ளனர்..

இதே போல கோவை மண்டலத்தில் செயல்படும் ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்கள் 498 மதிப்பெண்கள் முதல் 494,493,487 என சிறந்த மதிப்பெண்கள் எடுத்து கவனம் ஈர்த்துள்ளனர்..

இந்நிலையில் காளப்பட்டி பகுதியில் உள்ள ஸ்ரீ சைதன்யா பள்ளி வளாகத்தில் சிறந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களுக்குபாராட்டுவிழா, பள்ளியின் இயக்குனர்கள் சீமா மற்றும் நாகேந்திரா அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்றது..

இதில் தமிழ்நாட்டின் செயல்பாட்டுத்துறை தலைவர் ஹரி பாபு ஐம்பானி , மற்றும் கோவை மண்டலத்தின் ஏ.ஜி.எம் நாகேஸ்வர ராவ் மற்றும் ஆர்.ஐ . பாலகிருஷ்ணா கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இதில் காளப்பட்டி பள்ளியில் பயிலும் மாணவர் சிவா 498 மதிப்பெண்களும்,சின்னவேடம்பட்டி பள்ளி மாணவிகள் விகாஷினி, மவுமிதா மற்றும் காந்திபுரம் பள்ளி மாணவர் சித்தார்த்தா சூர்யா சுரேஷ் ஆகியோர் 494 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர்.. இதே போல திருப்பூர் ஸ்ரீ சைதன்யா பள்ளியில் பயலும் மாணவர் விகாஷ் சரண் 494 மதிப்பெண்களும், நீலாம்பூர்பள்ளி மாணவர் ராகுல் 493 மதிப்பெண்களும்,வடவள்ளியில் பயிலும் மாணவன் ரித்விக் கிருஷ்ணா 487, திருப்பூர் மாணவி திருப்பூர் மாணவி ஹாசினி சங்கமித்ரா 488 மதிப்பெண்களும் பெற்று அசத்தியுள்ளனர்...

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய நாகேஸ்வர ராவ், தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீ சைதன்யா பள்ளி அனைத்து கிளைகளிலும் 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

2025-26 தேசிய அளவிலான சிபிஎஸ்இ தேர்வு முடிவுகளில் அதிக தேர்ச்சி சதவீதம் மற்றும் சிறந்த மதிப்பெண்கள் எடுத்து பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளதாக அவர் கூறினார்..

இந்த சாதனைக்கு காரணமாக மாணவர்களின் கடின உழைப்பும், ஆசிரியர்களின் தொடர்ந்து அளிக்கப்பட்ட பயிற்சியும், பெற்றோரின் ஒத்துழைப்பும் அமைந்துள்ளதாக கூறினார். சிறந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள் கூறுகையில் ஆசிரியர்களின் தனிப்பட்ட கவனம்,பள்ளி நிர்வாகத்தின் முறைப்படியான தேர்வு பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல் வகுப்புகள் இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்ததாக தெரிவித்தனர்.

# கடையநல்லூர் இரத்னா ஆங்கிலப்பள்ளியில் பட்டமளிப்பு விழா

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் உள்ளது ரத்னா கல்வி குழுமம் ரத்னா நடுநிலைப்பள்ளி ரத்னா உயர்நிலைப்பள்ளி மற்றும் ரத்னா ஆங்கிலப்பள்ளி கடையநல்லூர் முத்துகிருஷ்ணா புரத்தில் 75 ஆண்டுகளாக தொடர்ந்து கல்வி சேவை ஆற்றிவரும் பவள விழா கண்ட பள்ளி இதுவாகும் இந்த பள்ளியின் நிறுவனர் திரு சீனிவாசன் அவர்களின் பிறந்த தினத்தை ஒட்டி பள்ளி வளர்ச்சி நாளாக கல்வி குழுமத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு சிறந்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது மேலும் உயர் கல்வி படிக்கும் ஏழை குழந்தைகளுக்கு ரத்னா கல்வி குழுமத்தின் சார்பில் கல்வி உதவித் தொகையும்ஒவ்வொரு ஆண்டு வழங்கப்பட்டு வருகிறது



இவ்வாறு கல்விக்காக அப்பகுதி ஏழை எளிய மற்றும் தாய் தந்தையற்ற குழந்தைகளுக்காக சிறப்பாக செயல்பட்டு வரும் இப்பள்ளியின் தற்போதைய கல்வி குழும தலைவர் நிர்வாகி ரத்னா பிரகாஷ் என்ற ராமசுப்பிரமணியன் தொடர்ந்து கல்வி சேவைகளை செய்து வருகிறார் இது தவிர அவர் சார்ந்து இருக்கும் அறக்கட்டளை சார்பாகவும் சுழற் கழகம் மற்றும் பல்வேறு சமூக நல அமைப்புகள் சார்பாகவும் பள்ளி குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும் குறிப்பாக தாய் தந்தை இல்லாத குழந்தைகளின் கல்வித்திறனை மேம்படுத்தி அவர்களின் வாழ்க்கையை உயர வைக்கும் ஒரு சிறந்த நல் ஆசிரியராக விளங்கி வருகிறார்

கடையநல்லூர் முத்துகிருஷ்ணாபுரம்,இரத்னா ஆங்கிலப்பள்ளியில் மழலையர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது .இவ்விழாவில் இரத்னா கல்வி குழுமத்தின் நிர்வாகி திரு.இரத்னா பிரகாஷ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார் .விழாவின் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு கிராம வங்கி முதன்மை மேலாளர் (ஓய்வு )திரு.மஹாராஜன் மற்றும் J J கிளினிக் மருத்துவர் தீத்தாரப்பன் மற்றும் ஸ்ரீ கல்பம் கிளினிக் மருத்துவர் ஸ்ரீநிதி ஆகியோர் கலந்து கொண்டு U .K .G முடித்து முதலாம் வகுப்பு செல்லும் மழலையர்களுக்கு பட்டமளித்து பாராட்டினார்கள் .மேலும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசும் ,பாராட்டும் வழங்கினார்கள் .விழாவின் இறுதியாக இரத்னா ஆங்கிலப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு .பார்த்த சாரதி நன்றியுரை வழங்கினார் .விழாவிற்கான ஏற்பாடுகள் அனைத்தும்ஆசிரிய,ஆசிரியைகளும்மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள் .

# தேவகோட்டையில் பள்ளியில் ஒளி ஏற்றுதல் விழாவுடன் பிரியாவிடை நிகழ்வு



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு மாணவர்களின் பிரியாவிடை விழா, ஒளி ஏற்றுதல் நிகழ்வாக பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள்முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

விழா தொடக்கத்தில் எட்டாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் வரிசையாக நின்றனர். அவர்களுக்கு முன்பாக ஏழாம் வகுப்பு மாணவர்கள் அமர்ந்திருந்தனர். ஆசிரியர் முத்துலெட்சுமி வரவேற்புரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாணவிகளின் திருக்குறள் நடனம் நடைபெற்றது. கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்விதமாகபள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தீப ஒளியை ஏற்றி விழாவை தொடங்கினார்.

பின்னர் எட்டாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் தங்களது கைகளில் மெழுகுவர்த்தி ஏற்றி ஒளி பரப்பினர். எட்டாம் வகுப்பு மாணவி அபர்ணா உறுதிமொழி வாசிக்க, அனைத்து மாணவர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அதன் பிறகு அந்த ஒளியை ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கி, அவர்கள் அதை பெற்றுக்கொண்டனர்.

ஏழாம் வகுப்பு மாணவர்கள் சார்பில் மாணவி நந்தனா ஏற்புரை வழங்கினார். விழாவின் இறுதியில் ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.

இந்தநிகழ்வில்மாணவர்கள் தாங்கள் முதல் வகுப்புமுதல்இப்பள்ளியில் கல்வி பயின்ற நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். விழாவில் ஏராளமான பெற்றோர்களும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# தி இந்தியன் பப்ளிக் சார்பாக நடைபெற்ற சைமன் எனும் தென்னிந்திய மாதிரி ஐக்கிய நாடுகள் மாநாடு



உலகளாவிய அறிவியல் மற்றும் நொழி'ல் நுட்ப மாற்றத்தில் மாறி வரும் சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதாரம் குறித்து இளம் மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் கோவை யில் சைமன் எனும் தென்னிந்திய மாதிரி ஐக்கிய நாடுகள் அமைப்பு மாநாடு தி இந்தியன் பப்ளிக் பள்ளியில் நடைபெற்றது..தேசிய அளவில் மூன்று நாடுகள் நடைபெற உள்ள இதற்கான துவக்கவிழாதி இந்தியன் பப்ளிக் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.. பள்ளியின் சி.இ.ஓ.ஜெய்ராம் பாலகிருஷ்ணன் , சி.ஓ.ஒ.ராஜ்குமார்,சி.ஏ.ஓ. சோனாலி கீத் மற்றும் பள்ளியின் தலைமை அலுவலர் இப்சன் ஆகியோர்தலைமையில்நடைபெற்ற விழாவில், இந்திய வருவாய் துறை அதிகாரி,சரக்கு சேவை வரி புலனாய்வு தலைமை இயக்குனர்ஜெயப்பிரகாசம் கலந்து கொண்டு மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்..

மாநாட்டில் ஜி 20, யுனெஸ்கோ, உலக சுகாதார அமைப்பு,ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகளை மையமாகக் கொண்டு 30-க்கும் மேற்பட்ட குழுக்கள் அமைக்கப்பட்டன.

இதில்,மாணவர்கள் உலக நாடுகளின் பிரதிநிதிகளாக செயல்பட்டு,பல்வேறு சர்வதேச பிரச்சினைகள் குறித்து விவாதங்களில் ஈடுபட்டனர். ஒவ்வொரு குழுவிலும் மாணவர்கள் முக்கியமான உலக பிரச்சினைகளை எடுத்துக்கொண்டுதங்களின்பேச்சுத் திறன், ஆராய்ச்சி மற்றும் கருத்துக்களை முன்வைக்கும் திறன்களை வெளிப்படுத்தினர்.

மாணவர்களின் அறிவுத்திறன் மற்றும் உலகளாவியபார்வையை விரிவுபடுத்தும் வகையில் நடைபெற்ற சைமன் மாநாடு கல்வி கற்பித்தலில் நிகழ்வாக அமைந்தது குறிப்பிடதக்கது.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளர் விஜய் பாலாஜி, நேற்று வீரப்பன்சத்திரம் மற்றும் பல்வேறு பகுதியில் வீடு வீடாகச் சென்று விசில் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வின்போது கட்சி நிர்வாகிகள் மற்றும் பெண் தொண்டர்களுடன் இணைந்து கட்சியின் வாக்குறுதிகளை விளக்கி ஆதரவு திரட்டினார்.

# பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் மகேஷ் பாண்டியன் தீவிர வாக்கு சேகரிப்பு



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சியின் வேட்பாளராகபோட்டியிடுபவர் மகேஷ் பாண்டியன் சிறந்த சமூக ஆர்வலரும் சமூக செயற்பாட்டளருமான மகேஷ் பாண்டியன் பொது நலன் கருதி அப்பகுதியில் ஏராளமான சில பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளார் இவர் குறிப்பாக சட்டம் சார்ந்த இடம் வாங்குதல் கொடுத்தல் அதிலுள்ள பிரச்சனைகள் மற்றும் காவல்துறை சட்டத்தை மீறிசெயல்படும்செயல்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் நல்ல சிந்தனையாளர் இவர் கடையநல்லூர் தொகுதியில்இடைகால் அருகே உள்ள வள்ளியம்மாள் புரம்என்ற கிராமத்தைச் சார்ந்த படித்த இளைஞர் இவர் தான் சார்ந்து இருக்கும் பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில்போட்டியிட்டு வருவதால் தொகுதி முழுவதும் நண்பர்கள் மற்றும்சமூக ஆர்வலர்கள் புடை சூழ சென்று யானை சின்னத்தில் வாக்கு கேட்டு வருகிறார் நேற்றைய தினம் செங்கோட்டை நகர் பகுதியில் பொதுமக்களை நேரில் சென்று சந்தித்து எதிர்கால திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தும் பிட் நோட்டீஸ்கள் வழங்கியும் வாக்கு சேகரித்தார்



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் தவெக வேட்பாளர் விஜய்பாலாஜி. இவர் தொகுதி மக்களிடையே தீவிரமாக வாக்கு சேகரித்து வருகிறார். தொகுதியில் வாக்குசேகரிப்பில் ஈடுபட்ட பொழுது விஜய்பாலாஜி சைக்கிள் ஓட்டி நோட்டமக்களிடையே வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பொது மக்கள் தங்களின் ஆதரவை தெரிவித்தனர். இந்நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி சென்னிமலை ஒன்றியத்திற்க்கு உட்பட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



மதுரை திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி ராஷ்ட்ரிய சமாஜ் தளம் (ஆர்) வெள்ளாளர்முன்னேற்றகழகம்சார்பில்வேட்பாளர்ரெங்கநாதன்துரைச்சாமிக்குஆதரவாக பொதுமக்களிடம்வீதிவீதியாகவாக்குபிரச்சாரம்கேட்டுவந்தனர்வேட்பாளர்ரெங்கநாதன் துரைச்சாமி பிரச்சார கூட்டத்தில் நடிகர் கலக்கப்போவது யாரு வடிவேல் கணேசன் மற்றும் வ உ சி மற்றும் அய்யா முத்துராமலிங்கம் தேவர் போல் வேடம் அணிந்து வேட்பாளாருக்கு வாக்கு பிரச்சாரம் கேட்டு வீதி வீதியாகபொதுமக்களிடம் நோட்டீஸ் கொடுத்து வெற்றி பிரச்சாரம் செய்தனர் இவ்வேட்பாளர் கூட்டத்தில் ராஷ்ட்ரிய சமாஜ்தளம் தலைவர் சுரபி ஜோதி முருகன், லண்டன் முருகேசன் பிள்ளை, டாக்டர் குமரன், விஜய் டிவியின் கலக்கபோவாது யாரு வடிவேல் கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்



தாராபுரம் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளர் திருமதி கோரி சித்ராமுருகேசன்அவர்களுக்குவிசில்சின்னத்தில்கொளிஞ்சிவாடி8வதுவார்டுபகுதியில் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் மற்றும் மாவட்ட இணைச் செயலாளர் சேக்பரித் ஆகியோர் அறிவுறுத்தலின்படி தாராபுரம் வடக்கு நகர செயலாளர் மனோஜ்பிரபாகர் நகரஇணைசெயலாளர்ரஜினிகுமார்நகரபொருளாளர்ஜாபர்சாதிக்நகர துணைசெயலாளர்போராளிதினகரன்நகரதலைமைச்செயற்குழுஉறுப்பினர்இதயகுமார் ஆகியோர் 8 வது வார்டு பகுதியில் தாராபுரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் திருமதி கௌரி சித்ரா முருகேசன் அவர்களுக்கு விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்

# பந்தலூர் அரசு மருத்துவமனை செல்லும் வழியில் லாரிகள் நிற்பதால் போக்குவரத்து பாதிப்பு



பந்தலூர் இரும்புபலம் பகுதியில் புதிதாக நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் பொதுவினியோக திட்ட பொருட்களான அரிசி, சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட பொருட்கள் இருப்பு வைத்து பகிர்ந்தளிக்க கட்டப்பட்டது.

இந்த குடோனுக்கு பந்தலூர் பஜாரில் இருந்து செல்ல மருத்துவமனைக்கு செல்லும் சாலைவழியாக செல்ல வேண்டும். இந்த சாலை மிக குறுகியதாக உள்ளது.

இதில் ஆட்டோ ஜீப் மற்றும் சிறு லாரிகள் செல்லும் வகையில் மட்டுமே உள்ளது. இந்த சாலை அரிசி கொண்டு செல்லும் கனரக வாகனம் செல்லும் அளவுக்கு அகலப்படுத்தபடவில்லை. புதிதாக தொடங்கப்பட்ட அரிசி குடோனுக்கு 30 டன் ஏற்றி வந்த டாராஸ்லாரி ஏற முடியாமல் நின்றது. இதனால் இருபுறங்களுக்கு வேறு எந்த வாகனமும் செல்ல இயலவில்லை. பொதுமக்கள் நடந்து கூட செல்ல இயலவில்லை.

அந்த சாலையில் அரசு மருத்துவமனை உள்ளதால் அவசர சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் வந்து போகும் சாலை அந்த நேரத்தில் ஏதாவது ஆபத்தான சிகிச்சைக்கு வருபவர்கள் நிலைமை மிகவும் மோசமாகும் அவலம் ஏற்பட்டுள்ளது.

எனவே உடனடியாக பந்தலூர் பஜாரில் இருந்து இரும்புபாலம் அரிசி குடோனுக்கு செல்ல சாலையை அகலப்படுத்தி தரவேண்டும் அல்லது மாற்று சாலை அமைத்துத் தர நெல்லியாளம் நகராட்சி முன்வரவேண்டும் எனவும்,

தவறும் பட்சத்தில் பொதுமக்களை திரட்டி நெல்லியாள நகராட்சியை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் செய்யப்படும் எனவும் பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்

# திருப்பரங்குன்றத்தில் நிச்சயமாக தீபமும் ஏற்றப்படும் மக்களின் வாழ்வும் உயரும்

## தி.மு.க. வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டிக்கு தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா வாக்கு சேகரித்தார்



அண்ணன் ஸ்டாலின் 2வது முறை முதல்வராக வரப்போவது உறுதி 7வது முறையாக திமுக ஆட்சி அமைக்க போவது உறுதி-அப்படி இருக்கும் போது பெண்களைக்குறிய பாதுகாப்பை அண்ணன்ஸ்டாலின் உறுதிப்படுத்துவார் என்று தான் நான் சொன்னேன். பெண்களின் சார்பா அவரிடம் உரிமையாக பேசுகிறோம் என்று தான் சொன்னேன் தவறான செய்தியை பரப்புகிறார்கள் திருப்பரங்கு ன்றத்தில் தேமுதிக பொது செயலாளர் பிரேமலதா பேச்சு. கூட்டத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா பேசும்போது: உதயசூரியன் சின்னத்திற்கு மகத்தான வெற்றியை தாருங்கள் உங்களை கைகூப்பி கேட்டுக்கொள்கிறேன். முருகன் ஸ்தலத்தில் ஒரு வெற்றி வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டிக்கு உதய சூரியன் சின்னத்திற்கு மகத்தான வெற்றியை கொடுத்து நீங்கள் அனைவரும் வெற்றியை உறுதி செய்ய வேண்டியது உங்களுடைய கடமை இந்த மத சார்பற்ற வெற்றி கூட்டணி தமிழக மக்கள் விரும்பும் கூட்டணி தமிழக மக்கள் போற்றும் கூட்டணி அண்ணன் ஸ்டாலின் சரியாக கட்டமைத்துள்ளார்.

அன்பு சகோதரி கிருத்திகா தங்கப்பாண்டி மதுரையின் மருமகளாக உங்கள் வீட்டு பெண்ணாக குன்றத்தில் தான் கேப்டன் கட்சி ஆரம்பித்தார்கள் இரண்டு மருமகளும் சேர்ந்து வந்திருக்கிறோம். உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கும் மருமகளுக்கு வாக்கு தருவீர்களா? அவரது வெற்றியை உறுதி செய்வீர்களா? திருப்பரங்குன்றத்திற்கு பலமுறை வந்து இருக்கிறோம் ஆனால் முதல் முறை மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தேர்தல் நேரத்தில் நான் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதை பற்றி பேசுகிறார்களே தவிர மக்களுக்கு என்ன செய்வோம் என்று யாரும் பேசவில்லை. நிச்சயமாக தீபமும் ஏற்றப்படும் மக்களின் வாழ்வும் உயரும். கிருத்திகா தங்கபாண்டி மக்களின் வாழ்வில் தீபம் ஏற்றுவார், ஒளி ஏற்றுவார். ஒற்றுமையாக இருந்து உங்களுடைய வாக்குகளை கிருத்திகா தங்க பாண்டிக்கு தர வேண்டும். ஆயிரம் கை கொண்டு மறைத்தாலும் ஆதவனை மறைக்க முடியாது பொய் செய்தி பரப்புவதை விட்டுவிட்டு இந்த கூட்டணி தான் வெற்றி பெறப் போகிறது ஆட்சி அமைக்க போகிறது 234 தொகுதிகளிலும் வென்று ஆட்சி அமைப்பார்அண்ணன்ஸ்டாலின் அவர்கள். அண்ணன் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்று உரையை நிறைவு செய்தார்.பின்னர் கூட்டணி கட்சிகளின் துண்டை கையில் எடுத்து சுழற்றினார்.

# நோட்டாவிற்கு கூட வாக்களிக்கலாம் ஆனால் திமுகவிற்கு மட்டும் வாக்களிக்காதீர்கள்

## தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் நிறுவனர் ஈசன் முருகசாமி பேட்டி



மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் உள்ள செய்தியாளர் அரங்கில் தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது அப்போது பேசிய அமைப்பின் நிறுவனர் ஈசன் முருகசாமி

2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலிலே, தமிழ்நாட்டு விவசாயிகள் திமுகவை புறக்கணிக்க வேண்டும், திமுகவிற்கு வாக்களிக்க கூடாது, திமுகவை தோற்கடிக்க வேண்டும் என்கிற பரப்புரையை 36 காரணங்களை பட்டியலிட்டு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

திமுககடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் வாக்குறுதிகள் மொத்தம் 505 தேர்தல் வாக்குறுதிகள் வழங்கியது அதில் 83 வாக்குறுதிகள் விவசாயிகளுக்கான தேர்தல் அறிக்கையாக வழங்கியது அவற்றில் 10 கோரிக்கைகளை மட்டுமே நிறைவேற்றி மீதமுள்ள 73 கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை

ஐந்து ஆண்டுகால ஆட்சி காலத்தில் 33 சிப்காட் திட்டங்கள் வாயிலாக 1 லட்சத்தி 10 ஆயிரம் ஏக்கர் விவசாயிடம் இருந்து நிலங்களை அடிமாட்டு விலைக்கு அபகரித்து கார்ப்பரேட் கம்பெனிக்கு கொடுத்திருக்கிறார். விவசாயிலையும் பொதுமக்கள் நடுத்தெருவில் நிறுத்தி இருக்கிறார். மேலும் திருவண்ணா மலை மாவட்டம் மேல்மாவில் முப்போகம் விளையக்கூடிய 2000 ஏக்கர் விவசாய நிலங்களை சிப்காட் அமைக்க அபகரித்தது அதை தடுத்து நிறுத்த அறவழியில் அமைதியாக போராடிய விவசாயிகளின் மீது இந்தியாவிலேயே முதன்முறையாக குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்தனர்.

தமிழ்நாட்டு விவசாயிகள் புறக்கணிக்க வேண்டிய சக்தியாக திமுக இருக்கிறது. தமிழ்நாட்டு விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்து திமுகவை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவோம். திமுக எதிர்கட்சியாக இருப்பதற்கு மட்டுமே தகுதியான கட்சி. ஆளும்கட்சியாக இருக்கும் போது அவர்கள் செய்கிற அராஜகம், அரசியல், ஜனநாயகம் எல்லாத்தையும் படுகொலை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழ்நாட்டு விவசாயிகள் திமுகவுக்கு வாக்களிக்க வேண்டாம். திமுகவை தோற்கடிங்க, திமுகவை புறக்கணிங்க, வேற எந்த அரசியல் கட்சிக்கு வேண்டுமானாலும் வாக்களிங்க. முடிஞ்சிக்கிட்டு, நோட்டாவுக்கு கூட ஓட்டு போடுங்க. தயவு செஞ்சு திமுகவுக்கு மட்டும் வாக்களிக்க வேண்டாம் என்கிற பரப்புரையை மேற்கொண்டு இருக்கிறோம். இந்த பரப்புரை வெல்லும், திமுக தோற்கும், விவசாயிகள் வெல்வார் என்பதை இந்த ஊடகர்கள் சந்திப்பின் வாயிலாக நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பரப்புரை கடந்த இரண்டு வாரங்களாக தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் நடந்து கொண்டிருக்கிறது.

பேட்டியின் போது மாநில தலைவர் சண்முகசுந்தரம் , அமைப்பு செயலாளர் நேதாஜி , மக்கள் சட்ட உரிமை இயக்கத்தினுடைய மாநில ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை மற்றும் சங்கத்தினுடைய மாநில மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கோவையில் ஃபிசிக்ஸ் வாலா நிறுவனம், தனது முதல் தொழில்நுட்பம் சார்ந்த ஆஃப்லைன் வித்யாபீத் மையத்தைத் தொடங்கியுள்ளது

## மாணவ மாணவியர்களில் கற்றல் திறன் மேம்படும் என தகவல்



கல்வி தொழில்நுட்ப நிறுவனமான ஃபிசிக்ஸ் வாலாநிறுவனம்,கோவை ஆர்.எஸ்.புரத்தில் புதிய தொழில்நுட்பம் சார்ந்த முழுமையான ஆஃப்லைன் மையத்தைத் தொடங்கியது இதனை ஃபிசிக்ஸ் வாலா நிறுவனத்தின், மூத்த துணைத் தலைவர் அமித் சிங் ரத்தோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து செய்தியாளர்களிடம் இம்மையம் குறித்து கூறியதாவது..

இந்த மையத்தில், கற்றலுக்கு உகந்த சூழலை வழங்கும் பல தொழில்நுட்ப வசதிகள் கொண்ட ஸ்மார்ட் வகுப்பறைகள், டிஜிட்டல் போர்டுகள் மற்றும் நேரடி கற்றலை மேம்படுத்தும் உள்கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.இங்குமாணவர்கள் அனுபவம்வாய்ந்த ஆசிரியர்களிடம் நேரடியாகக் கல்வி பயிலலாம் என கூறினார். ஃபிசிக்ஸ் வாலா வித்யாபீத், ஆஃப்லைன் பிரிவின் தலைமை நிர்வாக அதிகாரி அங்கித் குப்தா கூறியதாவது.. ஃபிசிக்ஸ் வாலா-வில், மாணவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்துவதற்கான வழிகளைத் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம்.தரமான கல்விக்காக மாணவர்கள் மற்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இனி இல்லை என்று நாங்கள் நம்புகிறோம் என்றார்.

இம்மையமானது மாணவர்களின் மன ரீதியான அழுத்தத்தை ஏற்படுத்துவதாகவும் கோவையில், ஃபிசிக்ஸ் வாலா வித்யாபீத் மையம் எனும், மையத்தை திறப்பதன் மூலம், தொழில்நுட்பம் சார்ந்த தரமான கல்வியை மாணவர்களின், வீட்டிற்கு அருகிலேயே கொண்டு வருவதையும், நாடு முழுவதும் அதிக கல்வி மையங்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்," என்றார். இங்கு மாணவர்களுக்கு, ஜேஇஇ, நீட் , உள்ளிட்ட தேர்வுகளுக்கு விரிவான பாடத்திட்டங்களை வழங்குவதோடு, ஒலிம்பியாட் போன்ற கல்வித் தேர்வுகளிலும் கவனம் செலுத்துகின்றது. மேலும், பதிவு செய்யப்பட்ட விரிவுரைகள் பொருட்களுக்கான உதவி, ஆஃப்லைன் சந்தேகத் தீர்வுகள், தினசரி பயிற்சித் தாள்கள், சிறப்பு தொகுதிகள் செயல்முறை சார்ந்த கற்றல் முறைகளை வழங்குகின்றது என தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.04.2026), 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் பெருந்துறை சட்டமன்ற தொகுதி கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி அலுவலகம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.



ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் 17042026 நேற்று கருங்கல்பாளையம் பகுதி டவுன் பெரிய பள்ளிவாசலில் இஸ்லாமிய சகோதர்களிடம் கை சின்னத்தில் வாக்கு சேகரித்தார், கருங்கல்பாளையம் பகுதி கழக செயலாளர் குறிஞ்சி N. தண்டபாணி , வார்டு கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வார்டு கழகம், சார்பு அணிகள் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துகொண்டு வேட்பாளருக்கு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 வருகின்ற 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதை யொட்டி (16.04.2026) அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர் ஆகியோர் முன்னிலையில் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள தேர்தல் நுண்பார்வையாளர்களுக்கான இந்திய தேர்தல் ஆணைய இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் (assembly constituency Randomization) தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.04.2026) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்ற தொகுதி, வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள அலுவலர்களுக்கான தபால் வாக்கு செலுத்தும் வசதி மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (17.04.2026), 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் பெருந்துறை சட்டமன்ற தொகுதி கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி அலுவலகம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று அமைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வு செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# தேர்தலுக்காக மட்டும் வருபவர்களை புறக்கணியுங்கள் மக்கள் பணி செய்பவர்களை தேர்ந்தெடுங்கள் பிரச்சாரத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேச்சு



தூத்துக்குடி ராஜகோபால் நகரில் பிரச்சாரத்தைத் தொடங்கி ராஜீவ் நகர், பி அண்ட் டி காலனி, மடத்தூர், சாமுவேல்புரம் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பின்னர் கீதாஜீவன் பேசுகையில் கடந்த ஐந்து ஆண்டு கால திமுக ஆட்சியில் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் பயனடைந்துள்ளது. மக்களின் கோரிக்கைகளை ஏற்று இந்தப் பகுதிகளில் புதிய தார்ச்சாலைகள், பூங்காக்கள், ரேஷன் கடைகள் மற்றும் மினி பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும்,விடுபட்ட கட்டமைப்புப் பணிகள் தேர்தல் முடிந்தவுடன் நிச்சயம் நிறைவேற்றப்படும்என்றும் உறுதி அளித்தார்.

மத்திய அரசின் செயல்பாடுகளை விமர்சித்த அவர், தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழகத்தின் உரிமையைப் பறிக்க பாஜக முயல்வதாகக் குற்றம் சாட்டினார். உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தென்னிந்திய மாநிலங்களைப் பழிவாங்கும் நோக்கில் புதிய நடைமுறைகளை மத்திய அரசு கொண்டு வரத் துடிப்பதாகச் சாடினார். மேலும், மகளிர் உரிமைத்தொகை 2,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பது உள்ளிட்ட திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துரைத்த அவர், தமிழகத்தின் பெருமையைக் காக்க ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சராக வேண்டும் என வலியுறுத்தினார். தொகுதியைப் பற்றித் தெரியாதவர்கள் சென்னையிலிருந்து வந்து போட்டியிடுவதாகவும், அவர்களுக்கு அளிக்கும் வாக்கு மக்களுக்கு எவ்வித நன்மையும் தராது என்றும் தவெக வேட்பாளரை மறைமுகமாக விமர்சித்தார். தமிழகத்தின் உரிமைகளை மீட்டெடுக்கவும், திமுக ஆட்சி தொடரவும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு அவர் உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்.

பொதுவாழ்க்கையில் இருக்கும் என்னை பொதுமக்கள் தொலைபேசி மற்றும் நேரில் எந்த குறைகள் கூறினாலும் அதை தீர்த்து வைக்கும் இடத்தில் உங்களோடு இருக்கிறேன்.இந்த தேர்தலில் தமிழகத்தில் திமுக ஆட்சி அமைய வேண்டும் ஸ்டாலின் முதலமைச்சராக வேண்டும். அதற்கு அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். என்று பிரச்சாரத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

இந்த பிரச்சாரத்தில் மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநகர இலக்கிய அணி தலைவர் சக்திவேல், அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப்,துணைஅமைப்பாளர் பால்ராஜ், சுற்றுச்சூழல் அணி தலைவர் வினோத், தொண்டரணி அமைப்பாளர் முருக இசக்கி, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் செல்வலட்சுமி, வக்கீல்கள் சீனிவாசன், ஆனந்தகபரியேல்ராஜ், டென்சிங், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டினோ, பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், ஜெயக்குமார், நிர்மல்ராஜ், தொழிற்சங்க நிர்வாகிகள் முருகன், உலகநாதன், வேல்முருகன். சண்முகராஜ், வட்டச்செயலாளர்கள் பாலகுருசாமி, சேகர், கவுன்சிலர்கள் கனகராஜ்,சந்திரபோஸ்,திமுக மாநில பேசச்சாளர் சரத்பாலா, காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் சண்முகம், முன்னாள் மாவட்ட தலைவர் முரளிதரன், தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் விமல்வங்காளியர் எஸ்டிபிஐ மாவட்ட செயலாளர் மைதீன்கனி, தேமுதிக தொகுதி பொறுப்பாளர் வல்லரசு துரை, விடுதலை சிறுத்தை கட்சி பொருளாளர் வில்சன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் தனலட்சுமி, மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட துணைச்செயலாளர் ஜாகிர்உசேன் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், திராவிடர் கழக தலைவர் முனியசாமி, மதிமுக மாநகர செயலாளர் முருகபூபதி,திமுக நிர்வாகிகள் தெர்மல்துரை, செல்வம், சுந்தர்ராஜன், பழனி, ஜெபராணி, பகுதி அணி அமைப்பாளர்கள் சூர்யா, காசிராஜன், மகேஸ்வரி, வட்டப்பிரதிநிதிகள் தஸ்நேவிஸ், ராபின்சன், ஜெபஸ்தியான், சுரேஷ், எஸ்டிபிஐ தொகுதி பொறுப்பாளர் காதர்உசேன், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார் கல ந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் அதிமுக வேட்பாளர் செல்லப்பாண்டியன் தீவிர வாக்கு சேகரிப்பு: பொதுமக்கள் உற்சாக வரவேற்பு

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் ரான செல்லப்பாண்டியன், தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட யின் வளர்ச்சித் திட்டங்களையும் மக்களிடம் எடுத்துக்கூறி அவர் வரவேற்பு அளிக்கப்பட்டது. திரளான கட்சி நிர்வாகிகள் மற்றும்



செல்லப்பாண்டியன், தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தீவிரமாகப் பிரசாரம் மேற்கொண்டு 'இரட்டை இலை' சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்.

முன்னாள் அமைச்ச பால்பாண்டி நகர், நிகிலேசன் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்தார். அதிமுக ஆட்சியின் சாதனைகளையும், தொகுதி வாக்கு சேகரித்தார்.

பிரசாரத்திற்காக 17-வது வார்டுக்கு வருகை தந்த வேட்பாளருக்கு, அதிமுக வட்டச் செயலாளர் முருகன் தலைமையில் சிறப்பான மற்றும் உற்சாகமான தொண்டர்கள் புடைசூழ நடைபெற்ற இந்தப் பிரசாரத்தில், பொதுமக்கள் வேட்பாளருக்குப் பூரண கும்ப மரியாதை அளித்தும்,சால்வை அணிவித்தும் தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர்.

# 'Pregnant', 'not HR': What Nashik BPO case accused Nida Khan's family said

*New counter-claims have been made by Nida Khan's family, days after her name emerged as the alleged "mastermind" in a sexual harassment and religious conversion case at a TCS-linked BPO in Nashik.*

*Nida Khan is among the eight accused and the Nashik police on Thursday said that while seven have been arrested, Nida was "absconding".*

*However, hours later, her family said that Nida was not on the run but is with her family, saying that she has nothing to do with the controversy. Nida Khan's father and uncle spoke to HT on Thursday. Here are 5 assertions Nida Khan's family made: 1. Nida Khan is pregnant: Her father said Nida is currently in Mumbai, and she is pregnant, expecting her first child. 2. Got married last year and works in Mumbai, not Nashik: Nida was married last year. This year in January, she moved to Mumbai to stay with her husband and works in Mumbai BPO office and not Nashik, said Khan's maternal uncle.*



*3. Not HR but a tele-caller: Contrary to reports circulating on television and social media, Khan does not work in the BPO's human resources department. She is employed as a telecaller in the sales team and is not among the senior staff, her family said. 3. Viral photo taken from Instagram: The family said a photograph of her labelled as the "HR Head" of the firm's Nashik unit has gone viral on social media and is being aired by TV news channels. The image was taken from her Instagram account, with the designation digitally superimposed. 4. Father regrets letting daughter work at BPO: Her father says he was once proud of his daughter for securing a job at a multinational company, but now regrets encouraging her to work. "It would have been better if she had not worked at all. Such terrible things are being said about her, none of which are true. We have been deeply upset. Her mother has fallen ill," he told HT.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.